www.padippakam.com

# தமிழினம் அழிக்கப்படுகின்ற நிலையிலும் ஏன் இந்த ஈனத்தனமான சாதிவெறி?

## கைதடிநிகழ்ச்சி தமிழனின் மனச்சாட்சிக்கோர் சவுக்கடி!

கைதடி கிழக்கு பிள்ளையார் கோவில் தேர்த்திருவிழா பாதியில் நிறுத்தப்பட்டது. எழுந்தருளி உலா வந்த பிள்ளையார், தேரில் இருந்து இறக்கப்பட்டு வசந்தமண்டபத்திற்கு மீள அழைத்துச் செல்லப்பட்டார். மருத்துவர்கள் பொறியியலாளர்கள் ஆசிரியர்கள், தத்துவஞானிகள் யோகர் சுவாமியின் அடியார்கள், நிர்வாகசேவையில் உள்ளவர்கள் ஆகிய பள்ளிப்படிப்பும், பல்கலைக்கழகப் பட்டப்படிப்பும் பதவிப் பெருமைகளும் உடையவர்களான கைதடி கிழக்கு உயர்சாதியினர் என்றுகூறப்படுவோரின் நிர்வாகத்தில் உள்ள இக் கோவிலில் பிராமணர்கள் உட்பட ஏனைய சாதிக்காரர் அடிமைகளாக உள்ளனர்.

உயர்சாதியாரின் சொல்லைக் கேட்டு பிராமணர்கள் பிள்ளையாரைத் தேரில் இருந்து இறக்கினர். அப்படிச் செய்வது கிரியை முறைக்குப் பிழை எனச் சொன்ன பிராமணர் தாக்கி எறிந்து ஏசப்பட்டனர். வடம்பிடித்து இழுக்க முனைந்த தாழ்த்தப்பட்டதாகச் சொல்லும் சமூகத்தினர் அடக்கப்பட்டனர், வடம் பிடிக்க விடாது தடுக்கப்பட்டனர்.

வடம் பிடிக்க வேண்டாம் எனத் தாழ்த்தப்பட்டதாகக் கூறப்படும் மக்களிடம் கூறிய பொழுது; அவர்கள் தங்கள் நேர்த்திக்கடனைச் செய்யவந்துள்ளதாகக் கூறினர் தம்மைத்தேர்வடம் பிடிக்க விடுமாறு மன்றாடினர். இதயத்தை இறுகிய இரும்பாக்கி, உணர்ச்சிகளை பெட்டியில் பூட்டிவைத்து அநீதியையும், ஆணவத்தையும் தாண்டவமாடவிட்ட உயர்குலத்தினர் என்றுதம்மைக்கூறும்மக்கள் தங்களைத் தவிர வேறுயாரும் தேர் வடம்பிடிக்க விடமாட்டோம் எனக்கூறினர் ஆணவ வெறியினால் ஆண்டவனுக்கும் அடியவர்கட்கும் முன்பு அநீதியாக நடந்தனர்.

நீதியாக நடவுங்கள் எல்லோருமாக வடத்தை பிடித்து இழுக்க அனுமதியுங்கள். ஆண்டவனுக்கு முன்பு அனைவரும் சமமே எனக் கருத்துக் கூறிய பெர்லிசார் பணம்பொருள் அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு.கே.சி நித்தியானந்தா, இந்துஇளைஞர் பேரவைத் தலைமைச் செயலாளர் திரு.க.சச்சிதானந்தன், கைதடியில் உள்ள சில படித்தவர்கள் ஆகியோர்களின் கருத்துக்களையும் மதிக்காமல், என்ன செய்வது என அறியாது தவித்த நிர்வாகத்தில் உள்ளவர்களையும் மதிக்காமல் சாதிவெறியும் ஆணவ்வெறியும் நிறைந்து "சாமியை இறக்கு, தேரை ஓடவிடாதே" எனச் சத்தமிட்டுக் கூச்சலிட்டவர்கள் அனைவரும் படித்தவர்கள் பட்டம் பதவி பெற்றவர்கள் இவர்கள் தமது சமூகத்துக்கும் தாம் படித்த கல்விக்கும் பெற்ற பட்டத்துக்கும், வகிக்கும் பதவிக்கும் இழுக்குத் தேடும்வகையில் நடந்து கொண்டனர்.

தாழ்த்தப்பட்ட சமூகமாகக் கருதியவர்கள் படிக்காதவர்கள் எனினும் அடக்கமாக அமைதியாக ஆறுதலாக தொழுதகையும் அழுத கண்ணுமாக நின்றனர், கைதடியில் தடித்த சாதித்தனம் ஒழிந்தால் தான், உண்மையான விடுதலையை தமிழ் மக்கள் பெறுவர்;

"SUTANTIRAN" "சுதந்திரன்" 30-5-79

படிப்பகம்